**ஒரு குடியகல்வு கூட்டு பங்காளித்துவம் ஸ்தாபிக்கப்படுவது தொடர்பான சுவிஸ் சமஷ்டி பேரவை மற்றும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்திற்குமிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம்**

சுவிஸ் சமஷ்டி பேரவை மற்றும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கம் இதன்பின் ‘‘உத்தியோகபூர்வமாக கைச்சாத்திடப்பட்டவர்கள்’’ என்று அழைக்கப்படுவார்கள்.

குடியகல்வு விவகாரங்கள் தொடர்பாக சுவிஸ் சமஷ்டி பேரவை மற்றும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையே கூட்டுறவு உடன்படிக்கையை நினைவுபடுத்தி 2016 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 4 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது.

குடியகல்வு மற்றும் மேம்பாடு என்பனவற்றின் துறையின் பல்தரப்பட்ட சர்வதேச சட்ட ஆவணங்களை நினைவுகூர்ந்து கையொப்பமிட்டவர்கள் பின்வருவனவற்றிற்கு தரப்பினராவார்கள்.

மனித உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்பான ஏனைய சம்பந்தப்பட்ட சர்வதேச மனித உரிமைகள் சட்ட ஆவணங்களின் உலகளாவிய பிரகடனத்தில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு மனித உரிமைகள் மற்றும் சுதந்திரத்தை உயர்வாக போற்றி மதிப்பு வழங்குவதற்கு பொறுப்பாக இருந்து சட்டத்தை நிலைநாட்ட சனநாயக கொள்கைகளை வகுத்தளிக்க தீவிரமாக முனைதல்

நீடித்த அபிவிருத்திக்கு மற்றும் குடியகல்வை புரிந்துகொள்ளும் ஆற்றலுக்கு ஒரு முழுமையான அணுகுமுறை தேவைப்படும் என்று 2030 நிகழ்ச்சி நிரலில் கூறப்பட்டவாறு குடியகல்வு மற்றும் அபிவிருத்தி என்பனவற்றிற்கு இடையே உள்ள இணைப்பை உணர்வுபூர்வமாக அறிந்துகொள்ளல்

உலகளாவிய ரீதியான குடியகல்வு என்பனவற்றின் சவால்களுக்கு உறுதியான தீர்வுகள் மற்றும் அதனை பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்புகள் என்பனவற்றை கண்டறிய குடியகல்வு துறையில் சம்பாஷணைகள் மற்றும் கூட்டுறவுகளை விஸ்தரித்து ஆழப்பதிப்பதற்காக பரஸ்பர கொள்கையின் அடிப்படையில் விருப்பகோரிக்கையிடல்

குடியகல்வோர்களது அக்கறைகள் மற்றும் உரிமைகள், என்பனவற்றுடன் பூர்வீக நாடு, சென்றடையும் இடம், மற்றும் இடைத்தங்கள் என்பனவற்றை கருத்தில் கொள்ளும் குடியகல்வு கொள்கையை மேற்கொள்ள ஒழுங்கான முறைமையற்ற குடியகல்வின் எதிர்மறையான விளைவுகளை முறியடிக்க உறுதியாக இருத்தல்

ஒரு குடியகல்வு கூட்டு பங்காளித்துவத்தினூடாக அவர்களுடைய கூட்டுறவை அதிகரிக்க பின்வறுமாரு ஒரு புறிந்துகொள்ளும் ஆற்றலைப் பெற்றுள்ளோம்.

முக்கியமாக இதன்பின் நிரல்படுத்தப்படும் பிரிவுகளில் இரு நாடுகளுக்கும் நன்மைதரக்கூடிய குடியகல்வு விவகாரங்கள் தொடர்பாக ஒரு வழமையான மற்றும் அடிக்கடி நிகழும் சம்பாஷணைகள் மற்றும் ஒரு பொதுவான சிந்தனையை கிளரும் செயல்முறையை நிர்மாணிக்க கையொப்பமிட்டவர்கள் பல வழிமுறைகளை செயல்படுத்த எண்ணியுள்ளார்கள்

- பெருவாரியான குடியகல்வின் முகாமைத்துவம்
- முறைகேடான குடியகல்வுக்கான தடை

- பிரஜைககள், நாடற்ற நபர்கள் மற்றும் மூன்றாவது நாட்டு பிரஜைகளுக்கான மறுஅனுமதி
- நாடுதிரும்புவது தொடர்பான உதவி மற்றும் ஒன்றுகூடல்
- குடியகல்வு ஆளுமை விவகாரங்களில் திறமை ஆற்றலை கட்டியெழுப்புதல்
- குடியகல்வர்களை கள்ளக்கடத்தல் செய்வதை தடுத்தல் மற்றும் சட்டவிரோதமாக ஆட்களை கடத்தி வியாபாரம் செய்பவர்களுக்கு எதிராக போராடுதல்
- விசா வழங்கள், கொன்சுயுளர் மற்றும் நிர்வாகம் தொடர்பான விவகாரங்கள்
- தொழில் பயிற்சி
- எல்லா மட்டங்களிலும் முழுமையான ஈடுபாடல்கள் மூலம் நீடித்த அபிவிருத்திக்கான பாதுகாப்பு முறைமை என்பனவற்றிற்கான மேம்பாடு
- இலங்கையில் புலம்பெயர்ந்தோர் முதலீடுகளுக்காக திட்ட உட்கட்டமைப்புகளுக்கு வலுவூட்டுதல்
- ஒன்றுகூடல்
- சட்ட ஒழுங்கு மற்றும் முன்னேற்றத்திற்கான ஆக்க முயற்சியை மேம்படுத்தும் செயற்திட்டங்கள்.

சுவிஸ் சமஷ்டி பேரவையின் சார்பில் நீதி மற்றும் பொலிஸின் சமஷ்டி திணைக்களம் மற்றும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் சார்பாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு என்பன தற்போதைய புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டவாறு இருதரப்பு ஆலோசனைகளுக்காக தேவைப்பட்டால் ஒரு பொறிமுறையை நிர்மாணித்து குடியகல்வு கூட்டு பங்காளித்துவத்தை மேற்பார்வை செய்யும்.

தற்போதைய புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உள்ள ஏற்பாடுகள் ஒப்பமிட்டவர்களிடையே எந்த ஒரு சட்ட உரிமைகளையோ அல்லது கடப்பாடுகளையோ உருவாக்காது

2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 06ஆந் திகதி கொழும்பில் வைத்து சிங்களம், தமிழ், ஜெர்மன் மற்றும் ஆங்கில மொழிகளில் இரு பிரதிகளில் ஒப்பமிடப்பட்டது. மொழிபெயர்ப்பில் ஏதாவது வேறுபாடுகள் இருந்தால் ஆங்கிலப் பிரதி ஏற்றுக்கொள்ளப்படும்.

சுவிஸ் சமஷ்டி பேரவைக்காக

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கத்திற்காக